**செ. கு. எண்: 031** **நாள்: 23.02.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – **23.2.2018**

**கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தார் I & II அணைகளிலிருந்து** கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்திற்கு ஏற்கனவே 21.7.2017 முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. பாசனப் பயிர்களை காப்பாற்ற தற்போது தண்ணீர் வழங்கப்படும் பாசன கால்வாய்களில் கூடுதல் நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட கோரி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கன்னியாகுமரி மாவட்டம், **பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தார் I & II அணைகளிலிருந்து 1.3.2018 முதல் 31.3.2018 வரை** நாள் ஒன்றுக்கு விநாடிக்கு 650 கன அடி வீதம் மொத்தம் 1740.90 மி.க. அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனப் பகுதிகளிலுள்ள **79,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**